

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

இரண்டாம்பத்து

2-ஆம் திருமொழி - அரவணையாய்

*

@ அரவணையாய்! ஆயரேறே! அம்மமுண்ணத்துயிலெழாயே *
இரவுமுண்ணாதுஉறங்கிநீபோய் இன்றுமுச்சிகொண்டதாலோ! *
வரவும்காணேன்வயிறசைந்தாய் வனமுலைகள்சோர்ந்துபாய *
திருவுடையவாய்மடுத்துத் திளைத்துதைத்துப்பருகிடாயே. (1)

வைத்தநெய்யும்காய்ந்தபாலும் வடிதயிரும்நறுவெண்ணெயும் *
இத்தனையும்பெற்றறியேன் எம்பிரான்! நீபிறந்தபின்னை *
எத்தனையும்செய்யப்பெற்றாய் ஏதும்செய்யேன்கதம்படாதே *
முத்தனையமுறுவல்செய்து மூக்குறிஞ்சிமுலையுணாயே. (2)

தந்தம்மக்கள்அழுதுசென்றால் தாய்மாராவார்தரிக்ககில்லார் *
வந்துநின்மேல்பூசல்செய்ய வாழவல்லவாசுதேவா! *
உந்தையார்உந்திறத்தரல்லர் உன்னைநானொன்றுரப்பமாட்டேன் *
நந்தகோபனணிசிறுவா! நான்சுரந்தமுலையுணாயே. (3)

கஞ்சந்தன்னால்புணர்க்கப்பட்ட கள்ளச்சகடுகலக்கழிய *
பஞ்சியன்னமெல்லடியால் பாய்ந்தபோதுநொந்திடுமென்று *
அஞ்சினேன்காண்அமரர்கோவே! ஆயர்கூட்டத்தளவன்றாலோ *
கஞ்சனைஉன்வஞ்சனையால் வலைப்படுத்தாய்! முலையுணாயே. (4)

தீயபுந்திக்கஞ்சன்உன்மேல் சினமுடையன், சோர்வுபார்த்து *
மாயந்தன்னால்வலைப்படுக்கில் வாழகில்லேன்வாசுதேவா! *
தாயர்வாய்ச்சொல்கருமம்கண்டாய் சாற்றிச்சொன்னேன்போகவேண்டா *
ஆயர்பாடிக்கணிவிளக்கே! அமர்ந்துவந்துஎன்முலையுணாயே. (5)

@ மின்னனையநுண்ணிடையார் விரிகுழல்மேல்நுழைந்தவண்டு *
இன்னிசைக்கும்வில்லிபுத்தூர் இனிதமர்ந்தாய்! உன்னைக்கண்டார் *
என்னநோன்புநோற்றாள்கொலோ இவனைப்பெற்றவயிறுடையாள்! *
என்னும்வார்த்தையெய்துவித்த இருடீகெசா! முலையுணாயே. (6)

பெந்திர்வாழ்வார்நின்னொப்பாரைப் பெறுதுமென்னுமாசையாலே *
கண்டவர்கள்போக்கொழிந்தார் கண்ணிணையால்கலக்கநோக்கி *
வண்டுலாம்பூங்குழலினார் உன்வாயமுதம்உண்ணவேண்டி *

கொண்டுபோவான்வந்துநின்றார் கோவிந்தா! நீமுலையுணாயே. (7)

இருமலைபோலெதிர்ந்தமல்லர் இருவரங்கம்எரிசெய்தாய்! * உன்
திருமலிந்துதிகழ்மார்வு தேக்கவந்துஎன்அல்குலேறி *
ஒருமுலையைவாய்மடுத்து ஒருமுலையைநெருடிக்கொண்டு *
இருமுலையும்முறைமுறையா ஏங்கியேங்கிஇருந்துணாயே. (8)

அங்கமலப்போதகத்தில் அணிகொள்முத்தம்சிந்தினாற்போல் *
செங்கமலமுகம்வியர்ப்பத் தீமைசெய்துஇம்முற்றத்தூடே *
அங்கமெல்லாம்புழுதியாக அளையவேண்டாஅம்ம! விம்ம *
அங்கமரர்க்கமுதளித்த அமரர்கோவே! முலையுணாயே. (9)

ஓடவோடக்கிங்கிணிகள் ஒலிக்குமோசைப்பாணியாலே *
பாடிப்பாடிவருகின்றாயைப் பற்பநாபனென்றிருந்தேன் *
ஆடியாடிஅசைந்தசைந்திட்டு அதனுக்கேற்றகூத்தையாடி *
ஓடியோடிப்போய்விடாதே உத்தமா! நீமுலையுணாயே. (10)

@ வாரணிந்தகொங்கையாய்ச்சி மாதவா! உண்ணென்றமாற்றம் *
நீரணிந்தகுவளைவாசம் நிகழநாறும்வில்லிபுத்தூர் *
பாரணிந்ததொல்புகழான் பட்டர்பிரான்பாடல்வல்லார் *
சீரணிந்தசெங்கண்மால்மேல் சென்றசிந்தைபெறுவர்தாமே. (11)

அடிவரவு : அரவணை மைத்த தந்தம் கஞ்சன் தீய மின் பெண்டிர் இருமலை அங்கமலம் ஓட வாரணி போய்.